Registered as a NewsPaper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    மாசி 04    (16-02-1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை: 363

## இலங்கையில் இரத்தம் தவறுதலாக பயன்பாடு

ஆஸ்பத்திரிகளில் மருத்துவர்கள் உட்பட மருத்துவத்துறை சார்ந்த பலர் இரத்தத்தைத் தவறாகக் கையாளுகிறார்கள் என்று மயக்கமருந்து நிபுணர் டாக்டர் நளினி றொட்றிக்கே தெரிவித்தார். சிறிலங்கா அனஸ்தீசிஓலஜிஸ்ட்ஸ் கல்லூரியின் தலைவர் டாக்டர் நளினி றொட்றிக்கே அதன் எட்டாவது விஞ்ஞான அமர்வுக் கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினையில் சமரசம் செய்ய காமன்வெல்த் அமைப்பு ஆவல்

## யாழ். வந்த குவேக்கர்ஸ் தகவல்

(கொழும்பு)

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினையில் சமரசம் செய்வதற்கு காமன்வெல்த் அமைப்பு ஆவலும் அக்கறையும் கொண்டிருக்கின்றது. இத்தகவலை சமீபத்தில் யாழ்ப்பாணம் வருகை தந்த குவேக்கர்ஸ் நல்லெண்ணத் தூதுக்குழு தெரிவித்தது. இந்த நல்லெண்ணத் தூதுக் குழுவினர் இலங்கை வருவதற்கு முன்னர் லண்டனில் காமன்வெல்த் செயலதிபரைச் சந்தித்து தமிழரின் பிரச்சினை குறித்து கலந்துரையாடினர். அப்பொழுதே இப்பிரச்சினையில் சமரசம் செய்து வைக்க காமன்வெல்த் அமைப்பு மிகுந்த அக்கறையுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவலைக் குவேக்கர்ஸ் நல்லெண்ணத் தூதுக்குழுவினர் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தெரிவித்துள்ளனர்.

## சீனன்குடா குண்டுவெடிப்பு; நட்டம் 150கோடி ரூபா. மேல்

(கொழும்பு)

சீனன்குடா விமானத் தள ஆயுதக் கிடங்கில் கடந்த ஜனவரி 21 ஆம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் விமானங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் சுமார் 50கோடி ரூபா என்றும் இதில் உலங்கு வானூர்திகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் 16 கோடி ரூபாவும் அடங்கும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி பி. ஸி. சிங்களச் சேவை அறிவித்தது.

கட்டடங்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் மாத்திரம் 100 கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கட்டடங்கள் இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஆங்கிலேயரால் கட்டப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொன்றும் 100 கிலோ எடை கொண்ட ஐந்து குண்டுகள் ஒரே நேரத்தில் வெடித்ததே இந்தப் பாரிய இழப்புகளுக்குக் காரணம் என்று அதே வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. அறிவித்தது.

வெவ்வேறு இடங்களில் பாதுகாப்பாக வைத்திருந்த

(6-ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் ஈழ கோரிக்கைக்கு சிறிலங்கா அரசே தூண்டியது

### —ஜே. வி. பி. யின் புதிய தலைவர்

வடபகுதியில் அரசு அதன் சொந்த நலன் கருதியே இராணுவ நடவடிக்கையை மேற்கொள்கிறது. இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்ப்பதில் எமக்கு நம்பிக்கையில்லை. தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் செய்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. தமிழ் மக்களை ஈழக்கோரிக்கைக்கு தூண்டியதும் அரசுதான் என்று ஜே.வி.பி. யின் தற்போதைய தலைவர் சோமவன்சஅபயசிங்க லண்டனில் பி. பி. ஸி. க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

பௌத்தமத பீடாதிபதிகள் வடக்கிற்கு சென்று காவலரண்களில் நின்றுபடம்பிடித்து ஏரிக்கரைபத்திரிகைகளில் வெளிவந்தமை கவலைக்குரியது என்றும் பௌத்த மதத்திற்கும் - பிக்குகளுக்கும் உள்ள உறவை பௌத்த பிக்குகள் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும்கேள்வி ஒன்றுக்குப்பதிலளித்த சோமவன்சஅபயசிங்க மேலும் தெரிவித்தார்.

## கடனுதவிக்கு நிபந்தனை

(கொழும்பு)

இராணுவப் பாதையைக் கைவிட்டு, இனப்பிரச்சினைக்கு சமாதானவழி மூலம் அரசியல் தீர்வுகாண ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென உதவி வழங்கும் நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிபந்தனைகள் போட்டிருப்பதாக நம்பகமான ராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

சிறிலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் இம்மாதம் 7ஆம் திகதி பாரிஸ் நகரில் கூடிய பொழுது தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது சம்பந்தமாக உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது குறித்து ஏமாற்றமும் அதிருப்தியும் தெரிவித்தன. இராணுவ நடவடிக்கைகள் என்ற போர்வையில் தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்படுவது குறித்தும் கவலை தெரிவித்தன.

பொதுசன உயிர்ச் சேதங்கள்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படலாம்

யாழ்ப்பாண குடாநாட்டில் வரும் செவ்வாய்க்கிழமை காலை ஆறுமணியுடன் முடிவடையும் ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படலாம் என்று கூட்டுப்படை நடவடிக்கைகள் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை ஆறு மணி முதல் 72 மணி நேரத்துக்கு இந்த ஊரடங்கு முதலில் பிரகடனப் படுத்தப்பட்டது.

இதே வேளை பெரும் எண்ணிக்கையிலான துருப்புகள் வடக்கு நோக்கி அனுப்பப்படுவதாகக் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இராணுவப் படுகொலைகள் கிழக்கில் அதிகரிப்பு

### ஒரு நாளில் 8 பேர் கொலை

(மட்டக்களப்பு)

தென்தமிழீழத்தில் தமிழ் மக்களின் மீதான சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை மட்டும் எட்டு அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் மட்டக்களப்பையும் மூவர் திருக்கோணமலையையும் சேர்ந்தவர்கள்.

இதேவேளை கடந்த வியாழனன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள குடுமியாபுரம் என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணு

(6-ஆம் பக்கம் பார்க்க)

## உன்னிச்சை மோதலில் வீரச்சாவடைந்தோர்

(மட்டக்களப்பு)

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு ஆறாம் கட்டைப் பகுதியில் ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பன்னிரண்டு வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

மேஜர் லதீப், லெப்ரினன் போசன், லெப்ரினன் கலாகரன், இரண்டாம் லெப்ரினன் மார்க்கேr, வீரவேங்கை விஸ்வலிங்கம், வீரவேங்கை றோமான், வீரவேங்கை ஜெகநாதன், வீரவேங்கை குணr,

(6-ஆம் பக்கம் பார்க்க[

## 6வாரங்களில் 19 விபத்துகள் 6பேர் பலி; பலர்படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த ஆறு வாரங்களில் மட்டும் 19 பெரிய விபத்துகள் நடைபெற்றுள்ளதாக தமிழீழ காவற்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்துகளில் ஆறு பேர் பலியாகியுள்ளனர் பலர் பெரும் காயங்களுக்கு உள்ளாகினர் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## நேற்று அதிகாலை பலாலி முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை தொடக்கம் பலத்த எறிகணைத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இந்த தாக்குதல்கள் முகாமைச் சுற்றியுள்ள கிராமங்களை நோக்கி நடத்

(6-ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

#### முத்தரசன்

நேற்று அதிகாலைகட்டுவன் மினி முகாம் பகுதியிலிருந்து பலத்த எறிகணைத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த எறிகணைத் தாக்குதலில் வீரவேங்கை முத்தரசன் (சுந்தர

(6-ஆம் பக்கம் பார்க்க)

### பீரங்கித் தாக்குதல்

சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகிலிருந்து நேற்று அதிகாலை திருவடி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சோதிடம்

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க அதிர்ஷ்ட எண்களில் பெயர வைக்க, ''அன்னை பூபதி'' பற்றிய நூல்பெற V A. சிவராசா சோதிடர் (வேலணை) 152 B அரசடி றோட், சந்கர் மடம், யாழ்ப்பாணம் (2210)


# பெரும் யுத்தத்திலும் முன்னெச்சரிக்கைவேண்டும்

**— சுந்தரராஜன்**

(குருநகர்)

பெரும் சண்டை ஒன்று ஏற்படும் என்ற பயத்திற்கு பொதுமக்கள் ஆளாகத் தேவையில்லை. எமது முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளால் எந்தப் பெரிய தாக்குதல்களையும் வெற்றிகொள்ள முடியும்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தொழிற்சங்கப் பொறுப்பாளர் திரு பொ. சுந்தரராஜன் தெரிவித்தார், அண்மையில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற யாழ். பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

சங்கத் தலைவர் திரு. அ. அல்பேட் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு பொ. சுந்தரராஜன் தொடர்ந்து கூறியதாவது;

''எமது பழைய தலைவர்கள் விட்ட தவறு காரணமாக 13 வயது தொடக்கம் 21வயது வரையான இளைஞர்கள் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை வழங்க முன்வந்தனர்.

இந்தப் போராட்டம் தற்செயலாக ஏற்பட்ட ஒன்றல்ல; வரலாற்று நிகழ்வாகும். போராளிகள் வேறுயாருமல்ல மக்களாகிய எங்களில் ஒருவராகத்தான் இருக்கிறார்கள். அவர்களின் மனம் உடைவதற்குக் காரணிகளாக எமது செய்கைகள் அமையக்கூடாது'' இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் மருசாளப்பா, முரளி திருவாளர்கள் அ. ஞானப்பிரகாசடாஸ். இராசதுரை, சி. இரர்சேந்திரம், அமுதலிங்கம் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (51)

# சுதந்திர நாடுகளாக சிறிலங்கா அங்கீகாரம்

(கொழும்பு)

முன்னாள் சோவியத்யூனியனின் எஞ்சிய பத்துக்குடியரசுகளையும் இலங்கை சுதந்திர நாடுகளாக அங்கீகாரம் செய்துள்ளது. சுதந்திர நாடுகளின் பொதுநலவாய அமைப்பில் அங்கம் பெற்றுள்ள அசர்பைஜான், ஆர்மினியா, பெலாரஸ், கசகிஸ்தான், கிர்கிஸ்தான், மால்டோவா, தர்க்கிஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், உக்ரைன், துர்க்மேனிஸ்தான் ஆகியவை இந்தப் பத்து நாடுகளும் ஆகும் ரஷ்யாவை இலங்கை முன்னரேயே அங்கீகரித்து விட்டமை தெரிந்ததே.

# கைத்தொழிலில்நிறுவன வரிச் சலுகைகள்

(கொழும்பு)

இலங்கையில் கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு மூன்று வகையான கைத்தொழில் நிறுவனங்களுக்கு ஐந்துவருடவரிசலுகை அளிக்கபடவுள்ளது. புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள் விரிவுபடுத்தும் கைத்தொழில் நிறுவனங்கள் புதிய கைத்தொழில் பேட்டைகள் ஆகியவையேஇவற்றில் அடங்க உள்ளன.

# அரச ஊழியர் பயன்படுத்தாதவிடுமுறைக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

அரச ஊழியர்கள் தமக்கு வழங்கப்பட்டிருக்கும் வருடாந்த விடுமுறையை முழுமையாகப் பயன்படுத்தாத பட்சத்தில் அவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படல் வேண்டும்.

இவ்வாறான கோரிக்கை ஒன்றை பொதுச்சேவை தொழிற்சங்க சம்மேளனம் உள்ளூராட்சி பொது நிர்வாகம், மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா விடம் சமர்ப்பித்துள்ளது.

அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது: அரசாங்க சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் விடுமுறைகளை பயன்படுத்துவதென்பது அவர்களுக்கு இருக்கும் உரிமையாகும். ஆனால் இதுவரை பதவிக்கு வந்தோர் அரச ஊழியர் அதிக விடுமுறை எடுப்பதால்தான் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுகிறது எனக் கூறுகின்றனர்.

ஊழியர் பயன்படுத்தாத விடுமுறைக்கு கொடுப்பனவு ஒன்று வழங்குவதன் மூலம் அவர்கள் எடுக்கும் விடுமுறை காலத்தை குறைக்கலாம் என அதில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# தொண்டா - பிரேமா மோதல் ஏற்படுத்த முயற்சி

(இரத்தினபுரி)

அமைச்சர் தொண்டமானையும் ஜனாதிபதி பிரேமதாசாவையும் முட்டி மோதவிடுவதே எதிர்க்கட்சியினரின் நோக்கம் என்று சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளும் கட்சி அங்கத்தவர் ஏ.எம்.டி இராகவன் கூறினார். மேற்படி சபையில் அரச தோட்டங்களை தனியார் மயப்படுத்துவதை நிறுத்தவேண்டும் எனக்கோரி எதிர்க்கட்சி அங்கத்தவர் டேவிட்இராசையா கொண்டு வந்த பிரேரணை ஒன்றின்மீது பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு தொடர்ந்துஅவர் உரையாற்றுகையில் இங்கு எதிர்க்கட்சியினர் தமது பேச்சில் தொண்டமானைத் தாக்குவதிலேயே நோக்கை செலுத்தினர். இன்றைய அரசில் தொண்டமான் மாத்திரமல்ல பல அமைச்சர்கள் உள்ளனர். அதனால் தொண்டமான் சொல்வதை மட்டும் ஜனாதிபதி செய்பவரல்லர் தீர ஆலோசித்து எது தொடர்பாகவும் இறுதி முடிவு எடுக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு என்றார்.

## பரிசளிப்புவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்புவிழா கடந்த வெள்ளியன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. பிரதமவிருந்தினராக யாழ்பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கமும், சிறப்புவிருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களான திரு எஸ் சிவானந்தனும், திரு.எஸ் சிவகுருநாதனும் கலந்து கொண்டார்கள் பரிசில்களைத் திருமதி தேவராணி சுந்தரலிங்கம் வழங்கினார். (மு)

## வாகன அனுமதிப் பத்திரம்

யாழ். செயலகத்தில் தற்போது 1992ம்ஆண்டுக்குரிய வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுவருகிறது

இவ் வனுமதிப்பத்திரக் கட்டம் வடக்கு- கிழக்குமாகாண சபையால் அனுப்பிவைக்கப்படாததினால் இதற்குப் பதிலாக பணம் கட்டியவர்களுக்கு தற்காலிக பத்திரம் ஒன்று வழங்கப்பட்டு வருகிறது. (24)


## கணக்கு ஆய்வாளர் (Auditor) தேவை

பல்வேறு கிளைகளைக் கொண்ட நிறுவனம் ஒன்றுக்கு கணக்குகளைச் சரிபார்க்கக் கூடிய கணக்கு ஆய்வாளர் தேவை.

முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

கணக்குத் திட்டமிடலில் தகைமை வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்கும் விலாசம் :
விளம்பர இல. 122
மே / பா ஈழநாதம்
31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். (2212)



## A/L 91 - பயிற்சிப் பரீட்சை

| | | | |
|---|---|---|---|
| 03 - 03 - 92 | 8 30 | பௌதிகவியல் | II |
| (செவ்வாய்) | 12 30 | பௌதிகவியல் | I |
| 05 - 03 - 92 | 8 30 | இரசாயனவியல் | II |
| (வியாழன்) | 12.30 | இரசாயனவியல் | I |
| 10 - 03 - 92 | 8 30 | விலங்கியல் | II |
| (செவ்வாய்) | 8 30 | பிரயோககணிதம் | II |
| | 12.30 | விலங்கியல் | I |
| | 12 30 | பிரயோக கணிதம் | I |
| 12 - 03 - 92 | 8 30 | தாவரவியல் | II |
| (வியாழன்) | 8 30 | தூயகணிதம் | II |
| | 12 30 | தாவரவியல் | I |
| | 12 30 | தூயகணிதம் | I |

❋ 01-03-92 இற்கு முன் தமது பெயரைப்பதிவு செய்து அனுமதி அட்டையைப்பெறுபவர்கள் மட்டுமே பயிற்சிப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள். 01-03-92இற்குப்பின் பரீட்சைக்கு புதிய அனுமதி வழங்கப் படமாட்டாது.

20-03-92 அன்று அனைத்து விடைத்தாள்களும் திருத்தப்பட்டு புள்ளிகளுடன்வழங்கப்படும். முதன்மைப் புள்ளி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பரிசில் வழங்கப்படும்.

❋❋ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பயிற்சிப் பரீட்சைகளில் பங்குபற்றலாம்.

(சி/3927)

மேலதிக விபரங்களுக்கு :

**BOND INSTITUTES**

58 1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக அனுமதிகள் 1991/92 ஆம் கல்வி ஆண்டு

1990 ஆகஸ்ட், 1991 ஏப்ரல் (விசேடபரீட்சை) இல் நடைபெற்ற க.பொ.த. (உயர் தர) பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் தங்களது பரீட்சைப் பெறுபேறு மொக்கப்புள்ளி போன்றவற்றின் ஆவணங்களுடன் நேரடியாக வந்து பல்கலைக்கழகஅனுமதி விண்ணப்பப் படிவங்களை 1992-02-18 ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 1992 - 02 - 21 ஆம் திகதி பி.ப.4.00 மணிக்குமுன்பு பல்கலைக்கழகத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் ஒப்படைக்க வேண்டும்.

- பதிவாளர்

1992-02-15.

(சி 3929)

## நினைவு கூருகின்றோம் 1992 - 02 - 16

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ இ. சாந்தகுமார் [பட்டிருப்பு மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஆயித்திய மலையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்.

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய

சுனில் [மட்டக்களப்பு]

சம்பூரில் மாட்டு வண்டியில் வந்த சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ விக்ரம் [சிற்றம்பலம் பெனடிக்ற் இருதயபுரம் - மூதூர்]

★ தர்மலிங்கம் ராசா [இருதயபுரம், மூதூர்]

★ மோகன் [கிளிவெட்டி, மூதூர்]

1988 ஆம் ஆண்டு கொழும்பு பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் கோயிலில் சிவராத்திரி விழாவிற்கு கூடியிருந்த பக்தர்கள் மத்தியில் குண்டு வெடித்ததில் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் தேச விரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-3928)

### பாலஸ்தீன விடுதலை இயக்கம்

## மேற்காசிய பேச்சுக்களில் கலந்து கொள்ளும்

(ரியூனிஸ்)

சிரியா, லெபனான், ஜோர்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் குழுவுடன் இணைந்து மேற்காசிய சமாதான மாநாட்டின் நான்காவது சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகள் குழுவும் இவ்வாரம் வாஷிங்டன் செல்லும் என்று அவ் இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கடந்த திங்கட்கிழமையன்று நடந்திருக்க வேண்டிய பேச்சுக்கள் இம்மாதம் இருபத்து நான்காம் திகதியன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது என்றும் தெரிவித்தார்.

மாஸ்கோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சுக்களில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் கலந்துகொள்ள மறுத்தது குறிப்பிடத்தக்கது. ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரேலினால் நிறுவப்படும் யூதர் குடியேற்றங்களை கண்டித்தே பாலஸ்தீன விடுதலை இயக்கம் மாஸ்கோ மாநாட்டைப் புறக்கணிப்பு செய்திருந்தது.

## ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ்புஷ் போட்டியிடுவார்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் எதிர்வரும் அதிபர் தேர்தலின் போது மீண்டும் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். உலகில் பதற்றத்தை தணிப்பதிலும் அணு ஆயுதஅச்சுறுத்தலை அகற்றுவதிலும் தான் வெற்றிகண்டுள்ளதாகவும் அவ்வழியில் தொடர்ந்து பாடுபடுவதற்காக தேர்தலில் போட்டியிடப் போவதாக ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

ஆனால் வளைகுடாப் போரின் போது தொண்ணூறு சதவிகிதமாக இருந்த ஜோர்ஜ்புஷ்சிற்கான ஆதரவு, தற்போது நாற்பத்தைந்து சதவிகிதமாக குறைந்து விட்டது எனவும், அவரது குடியரசுக் கட்சியின் வலதுசாரிகள் ஜோர்ஜ்புஷ்சை எதிர்க்கிறார்கள் எனவும் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

### புதிய இராணுவ அமைப்பு;

## ரஷ்யாவின் யோசனையை உக்ரெயின் நிராகரிப்பு

(மொஸ்கோ)

சோவியத் படைகளைக்கட்டுப்படுத்துவதற்காகப் புதிய அமைப்பொன்றை உருவாக்க ரஷ்யா மேற்கொண்டுள்ள முயற்சிகள் நிராகரிக்கப்பட்டன.

மற்றமூன்று குடியரசுகளான உக்ரெயின், அஜர்பைஜான், மால்டாவியா என்பன ரஷ்யாவின் திட்டத்தை எதிர்த்துள்ளன.

பிலேரஷ்யாவிலுள்ள மின்ஸ் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் ரஷ்யா இதற்கெனக் கொண்டுவந்த ஐக்கிய இராணுவ அமைப்பை ஏற்படுத்துவதற்கான திட்டத்தில் சேர்ந்துகொள்ள முடியாது என்று மூன்று குடியரசுகளும்தெரிவித்தன.

மூன்று குடியரசுகள் சேராத நிலையில் மற்ற எட்டுக் குடியரசுகள் ஐக்கிய இராணுவ அமைப்பை ஏற்படுத்தும் முயற்சி பயனற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக் எதிர்க்கட்சிகள் சி. ஐ. ஏ. தலைவர் சந்திப்பு

### சதாம்ஹூசைன்ஆட்சியைகவிழ்க்கசதி

(நியூயோர்க்)

ஈராக்கின் சதாம் ஹூசையினின் ஆட்சியைக் கவிழ்க்கும் வழிமுறைகளைப் பற்றி ஆராய எகிப்து நாட்டிற்கு விஜயம் செய்திருந்த அமெரிகக உளவுப் படையான சி. ஐ. ஏ அமைப்பின் தலைவர் றோபேட்கே ஈராக்கின் எதிர்க்கட்சித் தலைவர்களைக் சந்தித்துப் பேசினார்.

சதாமின் ஆட்சியை அகற்றி உடனடியாக எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு மாற்று அரசை நிறுவுவது பற்றி ஆலோசனை நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரிசா மாநிலத்தில் பட்டினியால்பலர் இறப்பு

ஒரிசாவிலுள்ள காலகண்டி மாவட்டத்தில் பட்டினியால் பலர் இறந்துள்ளார்கள் என்ற செய்தி ஒரிசா உயர் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

கடந்தவருடம் ஒரிசாவில் பலர் பட்டினியால் இறந்துவிட்டதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. இந்த செய்தி குறித்த உண்மைகளை ஆராய நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு இந்த செய்திகளை உறுதிப்படுத்தியுள்ளது.

பட்டினி மரணம் குறித்து செய்திகள் வெளியாகியும் அப்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் நடவடிக்கை எதையும் எடுக்கத் தவறிவிட்டார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாறு பட்டினியால் மரணத்தை தழுவியவர்களுக்கு மாநிலஅரசு ரூ. 25,000 வீதம் நட்ட ஈடு வழங்க வேண்டுமெனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஜெயின் கமிஷனின் பதவிகாலம்ஆகஸ்டில்முடிவு

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை பற்றிய விசாரிக்க மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதி ஜெயின் தலைமையிலான கமிஷனின் பதவிக்காலம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கப்பட்டு இருப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இக்கமிஷன் நீதிபதி வர்மா தலைமையிலான கமிஷன் விசாரிக்காத பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும், குறிப்பாக இச்சம்பவத்துடனான வெளிநாட்டுத்தொடர்புகள் பற்றி ஆராயுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஞ்சாப்பில் தேர்தலுக்காக பெருமளவு ராணுவம் குவிப்பு

(அமிர்தசரஸ்)

சட்டத்தையும், ஒழுங்கையும் பேணுவதில் சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நல்ல ஒத்துழைப்பு நிலவுவதாக பஞ்சாப் மாநில ஆளுநர் சுரேந்திரநாத் கூறியுள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் புதனன்று நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதோடு பெருமளவு இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சுமார் 2, லட்சம் இராணுவத்தினர் கடமையில் உள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தின் நகரப்புறங்களில் மட்டும் பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதாகவும் அவற்றில் முக்கிய தலைவர்கள் உரையாற்றுவதாகவும் தெரிய வருகின்றது. அதேவேளை கிராமப் புறங்களில் குழு நிலையான கலந்துரையாடல்கள் மட்டுமே இடம்பெறுகின்றன.

பஞ்சாப் மாநிலத்தில் பதின்மூன்று பாராளுமன்றத் தொகுதிகளுக்கு எண்பத்தியொரு பேரும், நூற்றுப்பதினைந்து சட்டசபைத் தொகுதிகளுக்கு ஐந்நூறுக்கும் அதிகமான வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

## பஞ்சாப் புதிய அரசுடன் மத்திய அரசு பேசும் - சவான்

(பஞ்சாப்)

பஞ்சாப்பிற்கு பரா இராணுவத்துருப்பினர் இனிமேலும் அனுப்பி வைக்கப்படமாட்டார்கள் என இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப்பில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெற இருக்கும் தேர்தலைபொட்டி அங்கு மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகளை பார்வையிட்ட பின்னர் நிருபர்கள் மத்தியில் அவர் இதனை தெரிவித்தார்.

இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மேலும் கூறுகையில் தேர்தல் மூலம் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கத்துடன் மத்திய அரசாங்கம் ராஜீவ் - லோங்கோவால் ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்து ஆராயும் என தெரிவித்தார்.

தேர்தல் விதிகளை மீறி நடக்க எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் தீவிரவாதிகள் தமது வெளிநாட்டு எஜமானர்களின் சொற்களைக் கேட்டு நடக்கிறார்கள் அகாலிதள் கட்சியும் ஏனைய சில கட்சிகளும் தீவிரவாதிகளின் பயமுறுத்தலுக்குப் பயந்தே தேர்தலை பகிஷ்கரிக்கின்றனர் என மேலும் அவர் தெரிவித்தார்

இதேவேளை பஞ்சாப் மாநிலத்தின் இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களில் மொத்தம் 26 பேர் காயமடைந்தனர்.

பட்டியாலா மாவட்டத்திலுள்ள நாபாநகரில் வாகனம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பார்சல் குண்டு ஒன்று வெடித்ததில் 18 பேர் காயமடைந்தனர்.

அம்த்ரத்ரஸ் நகரில் இடம்பெற்ற மற்றுமோர் பார்சல் குண்டுவெடித்ததில் 8 பேர் காயம் அடைந்தனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

### குரோசியாவிற்கான

## ஐ.நா. அமைதிப்படையை ஐரோப்பாவில் திரட்டுக

(ஜெனிவா)

குரோசியாவுக்கு அனுப்பப்படும் அமைதிப்படையினர் ஐரோப்பிய நாடுகளிலிருந்து மட்டுமேதிரட்டப்பட வேண்டுமென குரோசியா ஐ. நா. வைக்கேட்டுக்கொண்டுள்ளது. யூக்கோசெலவாக்கியாவில் செர்பியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட யூக்கோ சமஷ்டி இராணுவத்திற்கும், குரோசியப் படையினருக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து ஐ. நா. அமைதிப் படை கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படுவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது

இந்த அமைதிப்படையினர் ஐரோப்பிய நாடுகளில் இருந்து மட்டுமே திரட்டப்பட வேண்டுமெனவும், ஹெ[illegible]டிகானா போன்ற நாடுகளிலிருந்து படையினர் சேர்க்கப்படக் கூடாது எனவும் குரோசியா ஐ நா. செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனினும் குரோசியாவின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதல்ல என ஐ நா. தலைமைச் செயலாளர் பூட்டர்ஸ் காலி கூறியுள்ளார்.

## மனித உரிமை மீறலில் இசுரேல்; ஐ. நா. கண்டனம்

(ஜெனிவா)

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் வாழும்பாலத்தீனியர்களின் மனித உரிமைகளை இசுரேல் மீறி வருவதாக ஐ நா. அமைப்பின் மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத் தீர்மானத்தில் கோலான் மலைக்குன்றுப் பகுதிகளில்இசுரேலிய இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதற்கும்ஆக்கிரமிக்கப்பட்டஅரபுப் பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்கள் நிறுவ முயற்சிக்கும் செயலுக்கு அமெரிக்காவின் நிதியுதவி பற்றியும் குறைகூறப்பட்டுள்ளது.

## எண்ணெய்விலைஅதிகரிப்பு 'ஒபெக்' அமைப்பு ஆராய்வு

(ஜெனீவா)

எண்ணெய் விலையை அதிகரிக்கச்செய்வதற்காக உற்பத்தியை குறைப்பதுதொடர்பாக பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பான 'ஒபெக்' கில கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாக ஜெனிவாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன

சவுதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையே எந்த அளவில் உற்பததியைக்குறைப்பது தொடர்பாக தீவிர கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுள்ளது நாளொன்றுக்கு ஐந்து லட்சம் பீப்பா எண்ணெய் உற்பத்தியை குறைத்துக் கொள்வதற்கு சவுதிஅரேபியா விருப்பம்தெரிவிததது.ஆனால் இந்த அளவு வேறு நாடுகளின் எதிர்பார்ப்பை விட இரண்டரை லட்சம் குறைவானதாகும்.ஒபெக்அமைப்பின் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் மீண்டும் கூட விருப்பதால் இது தொடர்பாக இணக்கம் காணப்படலாம் என்று ராஜீயத்துறை வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

## காஷ்மீரில் ஆர்ப்பாட்டம்; இந். இராணுவம் கலைத்தது

(சிறிநகர்)

இந்தியாவில் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் நேற்றுமுன்தினம்வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர் முஸ்லிம்கள் காஷ்மீர் விடுதலை முன்னணியை ஆதரித்தும்,காஷ்மீருக்குச் சுதந்திரம் கோரியும் வீதியிலே ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்களைப் பரா இராணுவத்தினர் கலைத்தனர்.

தொடர்ந்து நான்காவது நாளாக அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர் வீடுகளுக்குத் திரும்பா விட்டால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் போவதாக இராணுவம் எச்சரித்தது என்று செய்திகள் கூறுகின்றன.

---

### போரும்

டும்.

சமாதான முயற்சிகள் என்பது இலங்கையில் மிகவும் சிக்கலான ஒரு விடயம். சமாதானம் ஒரு இரவில் தோன்றி விடாது. சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் மாதக்கணக்காக மேற் கொள்ளும் உணர்வு பூர்வமான முயற்சியினால் பெறப்படுவது. ஒரு அரசியல் தீர்வு காணப்பட்டாலும் கூட அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியலமைப்பு மாற்றங்கள் வேண்டப்படலாம்.

ஒரு தீர்வை நடைமுறைப்படுத்துவது என்பதே சம்பந்தப்பட்ட முக்கிய சக்திகளின் சம்மதம் இன்றிச் சாத்தியப்படாது. இத்தகைய சம்மதத்திற்கான உறுதிப்பாடு என்பது அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அமைப்பு ஒன்றின் மூலம் கண்காணிக்கப்படுவது அவசியமாகும்.

இலங்கையின் பிரச்சினைக்கு மத்தியத்துவம் வகிப்பதில் ஐ. நா. அமைப்பு ஆலோசனையுடன் பங்கும் வகிப்பது சிறந்ததாகும். ஐ. நா. தாபனம் மூன்றாம் உலக நாடுகளில் பிராந்திய விவகாரங்களைத் தீர்ப்பதில் பெறுமதிமிக்க அனுபவத்தையும், சமாதான முயற்சிகளில் ஆர்வமும் கொண்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் மத்தியத்துவத்தை கோருவதால் இலங்கையின் இறைமைக்கு ஆபத்து நேரலாம் என வாதிடுவோர் இதற்கு எதிர்ப்பு காட்டலாம். தொடரும் இந்த யுத்தமானது இலங்கையின் இறைமையை ஆபத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நம் இந்த மறந்து விடலாகாது தவறான தேசியப்பற்று தற்துணிபான முடிவுகளை எடுப்பதற்கு ஒரு தடையாக இருக்க முடியாது.

# மலையகத்தில் சிங்களவருக்கு சுதந்திரம் கிட்டவில்லை

## மத்திய மாகாண சபாநாயகர் கவலை

(கம்பளை)

நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்து 44 வருடங்கள் பூர்த்தியானதையொட்டி விழாக் கொண்டாடப்படுவது பெருமைக்குரிய விடயம்தான். இந் நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்தாலும், இந்நாட்டு மக்கள் குறிப்பாக மலையகத்தில் வாழும் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆங்கிலேயரை இந்நாட்டில் இருந்து விரட்டியடிக்க உயிர்த்தியாகமும், ஒத்தாசையும் வழங்கிய மக்கள் இன்னும் இந்நாட்டில் சுதந்திரமாக இந்த மண்ணை அனுபவிக்கவில்லை என்றால் அதனை யாரும் மறுப்பதற்கில்லை.

இவ்வாறு மத்திய மாகாண சபை சபாநாயகர் டி.பீ. சமரதுங்கா கண்டியில் நடைபெற்ற சுதந்திரதினவிழாவில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது.

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆண்டகாலத்தில், சிங்களவர்கள் குறிப்பாக மலையகப் பகுதியில் வாழ்ந்த சிங்களவர்களிடம் பரம்பரையாக அவர்கள் வாழ்ந்தகாணிகளை கொஞ்சம், கொஞ்சமாக சுவீகரித்து அதனைக் கோப்பி, தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்களாக மாற்றி அமைத்ததுமன்றி அக்காணிகளில் வாழ இந்தியாவில் இருந்து தமிழர்களையும் கொண்டு வந்து குடியேற்றிவிட்டனர்.

இன்று ஆங்கிலேயர் இந்நாட்டைவிட்டு போய்விட்டாலும் காணிகளைப் பறிகொடுத்த சிங்களவர்கள் பரம்பரை அதனை மீண்டும் அனுபவிக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கினிகத்தேனப் பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய போது ஜனாதிபதி இவ்வாறு கூறினார்:

மலையகப்பகுதி தோட்டங்களில் தலா நூறு ஏக்கர் வீதம் சுவீகரித்து, அப்பாவி கிராமப்புறமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைமேற்கொள்வேன். இதன்மூலம் நீங்கள் அல்லது உங்கள் பரம்பரை இழந்த காணிகளை மீண்டும்பெற்று வாழலாம் என்றார். ஆனால் இன்று அதனைப் பெற்றுத்தர எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை என்றார்.

மருதானை

# தொழில் நுட்ப கல்லூரியில் மிருகத்தனமான ராக்கிங்

(கொழும்பு)

மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் புதிதாக இணைந்த மாணவர்களைச் சிரேஷ்ட மாணவர்கள் மிருகத்தனமான முறையில் 'ராக்கிங்' செய்துள்ளனர்.

இதையடுத்து இக்கல்லூரியைச் சேர்ந்த 800 சிரேஷ்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் காலவரையறையின்றி இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன் கல்லூரியிலிருந்தும், 21 சிரேஷ்ட மாணவர்கள் வகுப்புக்களில் இருந்தும் இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர் என கல்வித்திணைக்கள சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

# 60 சிறிலங்கா மீனவர் இந்தியச் சிறையில்

(கொழும்பு)

இதுவரை இந்திய கடற்படையினரால் 60 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை விடுவிக்க டில்லியிலுள்ள சிறிலங்கா தூதுவராலயமும் சென்னையிலுள்ள சிறிலங்கா தூதுவராலயமும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் எட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டதாகவும் 16 பேர் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களுக்குச் சொந்தமான 15 மீன்பிடிப் படகுகளும் இந்தியக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிவாரணம் வழங்குவதில் அதிகாரிகள் மோசடி

(கொழும்பு)

''பயங்கரவாத நடவடிக்கைகளினால்'' பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பல ஊழல் மோசடிகள் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில உதவி அரசாங்க அதிபர்கள் போலியான விண்ணப்பங்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்குகின்றனர். இனி இவர்கள்மீதுஒழுக்காற்றநடவடிக்கை எடுக்கப்படும் என பொது நிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டமைச்சர் பெஸ்டஸ் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# இனவாதம் பேசி நிலைமையை சிக்கலாக்காதீர்

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள யோசனையை எதிர்ப்பது என்ற போர்வையில் இனவாதம்பேசி நாட்டின் நிலைமையை மேலும் சிக்கலாக்காதீர்கள் என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வி.பி. கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது: அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள சமரசத்தீர்வுத்திட்டத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டியவற்றை அங்கீகரித்து நீக்கி விட வேண்டியவற்றை நீக்கி விடலாம். அதைவிடுத்து தொண்டமானுக்கு எதிராக பிரசாரம் மேற்கொள்வது போல பேசி தமிழ் மக்களுக்கு எதிராக இனக்குரோதத்தை தூண்டிவிட்டு நிலைமையை சிக்கலாக்காதீர்கள் என தெரிவித்துள்ளார்.

# வைத்திய சேவைக்கு ஊழியர்கள் உதவி

(வடமராட்சி கிழக்கு)

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்திய சாலை வைத்திய சேவைக்கு டாக்டர்கள், ஊழியர்கள் மருந்துகள் வாங்கி அன்பளிப்பு செய்துள்ளார்கள்.

வைத்தியசாலையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டினை அடுத்தே, டாக்டர்கள், ஊழியர்கள்இந்த உதவியினைசெய்துள்ளார்கள். (36)

# மகப்பேற்று நிலையங்கட்கு குழாய்க் கிணறுகள்

யுனிசெப் நிறுவனம் அதிவிரைவில் இரண்டு மகப்பேற்று நிலையங்களுக்கு குழாய்க் கிணறு அடிக்கவிருக்கின்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது இவ்வருடத்திட்டமாக தேவையான இடங்களில் குழாய்க்கிணறு அடித்தல், பாலர்பாடசாலை ஆசிரியர்களுக்கு தளபாட வசதிகள், சுகாதாரக் கருத்தரங்கு, சுகாதார வினாவிடைபோட்டி வீட்டுத் தோட்டப் போட்டி, முதலுதவி மற்றும் சில திட்டங்களும் இவ்வருடம் நடைமுறைப்படுத்கப்படுவதாக யுனிசெப் யாழ். அதிகாரி திரு. ஜேசுரெட்ணம் தெரிவித்தார். (75)

# திறமை அடிப்படையிலேயே இனி வேலைவாய்ப்பாம்

(கொழும்பு)

அரசாங்க வெற்றிடங்களுக்கு இனிமேல் திறமை அடிப்படையிலேயே வேலை வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன என ஜனாபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார்.

அரசின் இக்கொள்கையை கண்டிக்கும் பலர் தமக்கு தேவையானவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க முடியாததாலேயே இக்கொள்கையை அவர்கள் கண்டிக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

# கம்பன் விழா 3-வது நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கம்பன் விழாவின் மூன்றாவது நாளான இன்று காலை ஒன்பது முப்பது முதல் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன

காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் கடவுள்வாழ்த்துடன் நிகழ்ச்சிகள்ஆரம்பமாகின்றன.

மாலைநிகழ்ச்சிகள் மாலை 4.30 மணிக்கு கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் திருஞானசம்பந்தர் ஆதீனக்கலாமண்டபத்தில் ஆரம்பமாகின்றன. இன்றைய தலைமையுரையை குழந்தை ம. சண்முகலிங்கம் வழங்குகிறார்.

விசேட நிகழ்ச்சிகளாக ''வாலிவதை நீதிக்குப்புறம்பானது'' எனும் வழக்காடு மன்றம் நடைபெறவுள்ளது. நீதிபதி திரு. இ. ஜெயராஜ் முன்னிலையில் விவாதம்நடைபெறும். வழக்குத் தொடுநர்களாக செ. சுந்தரம்பிள்ளை சி. சிவலிங்கராஜா, த. சிவகுமாரனும் எதிராளிகளாக சோ. பத்மநாதன், க. நாகேஸ்வரன் இரா. செல்வவடிவேல் ஆகியோரும் ஆஜராகின்றனர்

இதனைத் தொடர்ந்து ''காகுத்தன் பெருமைக்குக் கைகொடுத்தோர்'' எனும் இளைஞர் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது, இறுதியாக கலைப்பேரரசு ஏ.ரி பொன்னுத்துரையின் ''இன்று சந்திக்கும் இவர்கள்'' எனும் நாடக அரங்கும் இடம் பெறவுள்ளது.

# நித்திலா கல்விக்கூட மாணவர்கள் முதல் பரிசுகளைப் பெற்றனர்

அரியாலை பூம்புகாரில் அமைந்துள்ள நித்திலா கல்விக்கூட மாணவர்கள் பண்ணிசைப் போட்டியில் கீழ்ப்பிரிவு, ஆரம்பப்பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற நல்லூர் கோத்தணி பாடசாலைகளிற்கிடையிலான பண்ணிசைப் போட்டியிலேயே மேற்படி கல்விக் கூட மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றனர்.

இக் கல்விக் கூடம் 6-1-92 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மதபீடத்தினருக்கு சங்கடம்; அதை நாம் விரும்பவில்லை - லலித்

(அனுராதபுரம்)

மதச்சடங்குகள் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட விடயங்கள். எமது அங்கத்தினர்கள் பங்குபற்றும்மதச்சடங்குகளை பெரிய அளவில் விளம்பரப்படுத்தி, பெருமளவானோரை கூட்டுவதன் மூலம் மதபீடத்தினரைச் சங்கடப்படுத்த நாம் விரும்பவில்லை என்று அத்துலத் முதலி கூறியுள்ளார்.

திரு. லலித்அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா, ஜி எம். பிரேமச்சந்திரா, சமரவீர வன்னி ஆகியோருட்பட மற்றும் பல ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் அனுராதபுரம் சிறி மகாபோதிபருகே மதச்சடங்கு ஒன்றை நிறைவேற்றிய பின்னர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐக்கியத்தைப் பாதுகாப்பது முக்கிய குறிக்கோளாகும்

(கொழும்பு)

இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் முக்கியகுறிக்கோளாகும்என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா வலியுறுத்திக் கூறியுள்ளார். வாரியப்பொல தேர்தல் தொகுதியில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் இக்கொள்கையில் மாற்றம் எதுவும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது. ஐக்கியத்தைப் பாதுகாக்கும் திட்டங்களை நிறைவேற்ற சகல சமூகத்தவரினதும்ஆதரவு பெறப்படும். மனிதனை மனிதன் பிரிக்கும் ஆயுதமாக மொழியை நாம் கருதாமல் சகலரையும் இணைக்கும் தங்கச் சங்கிலியாகக் கருதவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# வடக்கு - கிழக்கு மக்கள் கடின உழைப்பாளிகளாம்

(வவுனியா)

வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒரு பிரச்சினையல்ல என்று வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் லெப்.ஜெனரல் நளின் செனிவிரத்தினாகூறியுள்ளார். இதனை வவுனியாவில் விதை உற்பத்திப் பண்ணையை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றிய போது அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பல வருடமாக கடமையாற்றிபதில் இருந்து இங்குள்ள மக்கள் கடின உழைப்பாளிகள் என்பதைப் புரிந்து கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

# சர்வதேசமகளிர் தினம் கொண்டாட ஏற்பாடு

(கொழும்புத்துறை)

சர்வதேச மகளிர்தின விழா யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் 8ம் திகதி (8-3-92) ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம் மேற்கொண்டு வருகின்றது.

இம் மகளிர் தினவிழாவை முன்னிட்டு கலை, கலாசாரப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. யாழ் மாவட்டத்திலுள்ள சகல மகளிர் குழுக்களும் தத்தமது பகுதிகளிலிருந்து கலந்து கொள்ள விரும்பும் கலை நிகழ்ச்சிகள் பற்றி நேரில் அறிவிக்குமாறு மகளிர் குழுத்தலைவியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

# 826 தமிழ் அகதிகள் திருமலை வந்தனர்

(திருமலை)

தமிழகத்தில் இருந்து மற்றொரு தொகுதி அகதிகள் எம்.வி. அக்பர் கப்பலில் திருமலைக்கு நேற்று வந்து சேர்ந்துள்ளனர்.

இக்கப்பலில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 826 அகதிகள் அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் 36 பேர் அரசாங்க ஊழியர்கள் ஆவர்.

## சிந்தனைக்கு

மனிதரின் செயல்கள், அவர்கள் [சிந்தனைக்குச் சிறந்த விளக்கங்கள்.

— ஜான்லாக்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 16-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# இந்தியா - பாகிஸ்தான் தடுக்க முடியாதது

"எல்லை தாண்டும் பேரணி மூலம் வெளியிடப்பட்ட காஷ்மீர் மக்களின் உணர்வுகளை இந்தியா புரிந்து கொள்ளவேண்டும். இம்மக்களைத் தொடர்ந்தும் பாகிஸ்தானால் கட்டுப்படுத்த முடியும் எனவும் இந்தியா எண்ணி விடக்கூடாது'' இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் நவாப் சரீப் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாப் சரீப்பின் இக் கூற்று எச்சரிக்கை மிகைப்படுத்தப் பட்டதொன்றல்ல. இந்தியாவிற்கு காஷ்மீர் மக்களின் உண்மை நிலையையும், பாகிஸ்தானின் நிலைப்பாட்டையும் தெளிவாக எடுத்துக் கூறியவையாகும்.

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியினரின் எல்லை தாண்டும் முயற்சியை பாகிஸ்தான் தற்பொழுது இருந்த சர்வதேச சூழ்நிலையின் காரணமாகவே வன்முறை மூலம் தடுத்து நிறுத்தியது. சர்வதேச நிர்ப்பந்தம் இல்லாவிடில், பாகிஸ்தான், காஷ்மீர் மக்கள் மீது வன்முறைப் பிரயோகம் செய்திருக்கமாட்டாது.

ஆனால், தொடர்ந்தும் பாகிஸ்தானினால் அவ்வாறு செய்யமுடியுமா என்பது சந்தேகமே. தற்பொழுதே, பாகிஸ்தான் வன்முறை மூலம் தடுத்து நிறுத்தியது தொடர்பாக நவாப் சரீப் அரசாங்கத்திற்கு எதிராக பல கண்டனங்கள் எழுந்துள்ளன. ஆஸாத் காஷ்மீரில் வேலை நிறுத்தங்களும், கதவடைப்புக்களும், நவாப் சரீப் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களும் எழுந்துள்ள வேளையில். இனிமேலும் இவ்வாறானதொரு அடக்குமுறையை பாகிஸ்தானினால் மேற்கொள்ள முடியும் என்பது சந்தேகமே. அவ்வாறு அடக்குமுறை மேற்கொள்ள முற்பட்டால். ஆஸாத் காஷ்மீரில், பாகிஸ்தானுக்கு எதிரான போராட்டமாகவே அது வெடித்துவிடும். அத்தோடு பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் அதையே சாட்டாக வைத்து நவாப் சரீப் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடவும் கூடும்.

அதேவேளை, காஷ்மீர் மக்கள் இதுபோன்ற எல்லை தாண்டும் போராட்டம் ஒன்றை இனியும், மேற்கொள்ளமாட்டார்கள் என்பதும் இல்லை. எல்லை தாண்டும் போராட்டம் அறிவிக்கப்பட்ட போது இப்பேரணியில் பங்குபற்றும் பலர் - சிலவேளை பெரும்பான்மையினரே - கொல்லப்படலாம் என்பது அவர்களுக்குத்தெரியும். இந்தியா இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனத்தை அவர்கள் ஜம்மு - காஷ்மீரில் நடப்பவற்றைக் கொண்டே அறிந்திருந்தார்கள் ஆனால் பாகிஸ்தான் பேரணியைத் தடுத்த இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்ற நிலை உருவாகியதோடு, அதற்கு முன்னோடி நடவடிக்கையான பாகிஸ்தான் பொலிஸ் எடுத்த நடவடிக்கையில் 10 பேருக்கு மேல் கொல்லப்பட்டதைத் தொடர்ந்துமே பேரணியை நிறுத்தும் தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்கு காஷ்மீர் முன்னணியினருக்குஏற்பட்டது இந்திய இராணுவத்தால் மரணிக்க தயாரானவர்கள் பாகிஸ்தான் இராணுவத்தால் இறப்பதற்கு சிந்தித்தமையே பேரணி கைவிடப்பட்டமைக்குக் காரணமாகும்.

ஆனால், இனிமேல், காஷ்மீர் விடுதலை முன்னணியினர் ஓர் போராட்டத்தை தொடங்குவார்களேயானால், அதைப்பாகிஸ்தான் இராணுவ ரீதியாகத் தடுக்க முற்பட்டாலும், அதையும் மீறிச் செயற்படக்கூடிய நிலையிலேயே மேற்கொள்வார்கள். ஏனெனில் பாகிஸ்தான் குறித்து அவர்களுக்கு இருந்த அபிப்பிராயம் தற்பொழுது மாற்றம் கண்டுள்ளது.

அதேவேளை, பாகிஸ்தானும், காஷ்மீரியரின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஆஸாத் காஷ்மீரில் நெருக்கடி நிலை ஒன்றை உருவாக்குவதோடு, இன்று ஜம்மு - காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் எனப்போராடும் காஷ்மீரியரையும் பகைத்துக் கொள்ளுமா? அவ்வாறு பகைத்துக் கொண்டாலும் அதில் பாகிஸ்தானினால் வெற்றிபெற முடியுமா என்பது கேள்விக்குரியதே ஏனெனில் மக்கள் போராடத் துணிந்துவிட்டால் எந்த அடக்குமுறை சக்தியாலும் அதனைத் தடுத்து நிறுத்தமுடியாது. இதற்கு உதாரணங்கள் ஆங்காங்கே காலத்திற்குக் காலம் உலகின் பல பாகங்களிலும் பரவிக்கிடக்கின்றன.

# போரும் சமாதானமும்

சிக்கலான நிலையை அடைந்திருக்கும் இனப்பிரச்சினையில் இன்று யுத்தத்தை தொடர்வதற்கும், சமாதான முயற்சிகளைத் தொடங்குவதற்கும் சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இதேவேளை யுத்தத்தை தொடர வேண்டும் என்பதுவே உரத்த குரலில் கேட்கிறது. சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கான குரல் அரசியல் வட்டாரங்களில் மிக மெதுவாகவே ஒலிக்கிறது.

தென்னிலங்கையில் கிளர்ந்த எதிர்ப்பையடுத்து தொண்டமானின் யாழ்ப்பாண விஜயம் கைவிடப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் வட பகுதிக்கு சென்று வருபவர்களினூடாக சமாதானத் தூது அனுப்பி வருகின்றார்கள். ஆனால் தென்னிலங்கையில் எவரும் இவற்றைக் கவனத்திற்கு எடுப்பதாகத் தெரியவில்லை.

இதேவேளை அரசாங்க இராணுவத்தினர் குடாநாட்டின் மீதான மிகப்பெரும் தாக்குதல் ஒன்றை நடாத்த தயாராகி வருகின்றனர். இராணுவத்தினர் புதிய போர்த் தாங்கிகள் (New batl'c tanks) அதி நவீன துப்பாக்கிகள் உட்பட கனரக ஆயுதங்களைப் பெற்றிருப்பதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். இத்தகைய புதிய ஆயுதங்களைக் கையாளுவதற்கு இராணுவத்தினர் தற்போது பயிற்றப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தின் இதயப் பகுதியை நோக்கிய இராணுவத்தின் நகர்வு பெரும்பாலும் பெப்ரவரியின் இறுதியில் அல்லது மார்ச் மாத ஆரம்பத்தில் இடம்பெறக் கூடுமென இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் முற்றாகத் தோற்கடிப்பது என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் இராணுவத்தினரின் தயாரிப்புகளுக்கு நியாயம் கற்பிக்கப்படுகின்றது. மேலும் இராணுவத்தீர்வு குறித்த கூக்குரல் முன்னெப்போதையும் விட இப்போது உரத்துக் கேட்கின்றது. இத்தகைய சமாதானத் தீர்வு முன் வைக்கப்படுவதற்கும் முன்பாக விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் முழுமையாகப் பலவீனப்படுத்தப்பட வேண்டுமென்பதே இராணுவ ரீதியான சிந்தனையாளர்களின் முக்கியமான கருதுகோளாகும். இராணுவத் தீர்வு நோக்கிய செயற்பாட்டிற்கு பிரேமதாசா முழு மனத்துடன் ஈடுபடாமை சில சிங்களப் பேச்சாளர்கள் மட்டத்தில் கோபத்தைக் கிளறியிருக்கின்றது.

எனினும் யாழ்ப்பாணத்தின் மீது பெருமளவிலான இராணுவ நடவடிக்கையின் அவசியம் குறித்து அறிந்து கிரகித்துக் கொள்வது கடினமாகவே இருக்கின்றது, புலிகளைப் பலவீனப்படுத்துவதா? விடுதலைப் புலிகளைமுற்றாக அழிப்பதா? பிரபாகரனைக் கைது செய்வதா? அல்லது விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு இழுத்து வருவதா? இராணுவம் பெரிய தாக்குதல் ஒன்றின் மூலம் யாழ்ப்பாணத்தில் தன்னை நிலை நிறுத்த முடிந்தாலும் கூட விடுதலைப் புலிகள் பாதுகாக்கப்பட்ட கெரில்லாப் போர் ஒன்றைத் தொடர்வதற்கான ஆயுதங்களையும் ஆளணிகளையும் கொண்டிருப்பார்கள் என்பது நிச்சயம். பணயமாகப் பிடிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தைக் கொண்ட ஒரு பரந்த நிலப்பரப்பைப் பாதுகாப்பது சிறிலங்கா இராணுவத்திற்கு நீண்டகாலத்திற்குப் பெரும் கஷ்டமானகாரியமாக இருக்கும். அதேவேளை சாக்குகளையும் சொக்லேட்டுக்களுடன் சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணம் போனால் அரைப்பட்டினி நிலையில் இருக்கும் யாழ்ப்பாண மக்கள் ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்குஎந்த நியாயமும் இல்லை. இராணுவத் தளபதிகளே இராணுவ நடவடிக்கைகளின் அரசியல்விளைவுகள் பற்றி மகாபோதி சங்கத் தலைவர்களை விடவும் நன்கறிவார்கள் என்று நம்பலாம்.

எதிர்பார்க்க முடியாத அளவுக்குப் பெருந்தொகையான சாதாரண மக்கள் இத்தகைய இராணுவ நடவடிக்கையின் மூலம் பாதிக்கப்பட நேரிடும். இவ்வாறு நடப்பது சிங்களவர்களுடன் நேர்மையான சமாதானம் ஒன்றைக் காணலாம் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்களிடம் இல்லாது ஒழித்து விடும். மேலும் இப்போது இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கு இருக்கின்ற மிகச்சிறிய இடைவெளியையும் இது இல்லாததாக்கும் இது சிறிலங்காவை மிகப் பெரும் அரசியல் அழிவுக்குத் தள்ளிவிடும்

தென்பகுதியில் நடக்கும்அரசியல்விவாதங்களில தற்போது சமாதானத்திற்கான உணர்வலைகள் தென்படுவதை நாம்

> இலங்கையில் போரும் சமாதானமும் என்ற தலைப்பில் திரு ஜயதேவ உயன்கொட என்பவரால் பெப்ரவரி ஒன்பதாம்திகதிய 'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகையில் எழுதப்பட்ட கட்டுரையின் முக்கிய பகுதி இது.

உணரமுடிகின்றது எனினுமிது மிகப் பலவீனமாகவே இருக்கின்றது. தகவல் தொடர்பு சாதனங்கள் யுத்தச் சூழ்நிலைக்கே முதன்மையளிக்கின்றன. இந்த விவாதங்கள் பெரிய அரசியல் கட்சிகளில் கூட விரிசல்களைத் தோற்றுவித்துள்ளன. சமாதானத்தைக்கோரும் உறுதியான - பலமான குரல் எதுவும் ஐ.தே.கவிலிருந்து கேட்கவில்லை: சிறிலங்கா சு.க சிங்களப் பாரம்பரியத்தைக் காப்பாற்றும் ஹெல உறுமயவுக்கு மேடையமைத்துப் பெரும்பிளவுகளைச் சந்தித்துள்ளது. ஆகக்குறைந்தது ஒரு செய்திப் பத்திரிகையாவது யுத்தத்திற்கு ஆதரவாகத் தனது முழுச்சக்தியையும் பிரயோகித்து வருகின்றது,

வடக்கிலோ, கிழக்கிலோ வாழும் மக்களுடன் எந்தவித நேரடித்தொடர்பும் இல்லாத சிங்கள பௌத்த மத பீடத்தினர் செய்திப் பத்திரிகைகளின் தலைப்புக்களில் இடம்பிடிப்பது மிகக் கேவலமானதாகும். கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதபீடத்தினர் யாழ்ப்பாணமக்களின்நிலையைநேரில் அறிய ஆவல்கொண்ட ஒரே குழுவாக இருக்கின்றது இதேவேளை அந்த சிங்கள தேசியவாதம் பேசும் செய்திப்பத்திரிகைகளில் கனவுலகில் வாழும் இந்தப் பௌத்த குருமார் இனங்கள் பற்றிய அச்சத்தை தங்களது சொந்த விருப்புக்களையும் நலன்களையும் மட்டுமே பிரதிபலிக்கின்றார்கள்.

நான் செல்வாக்கு மிக்க இரண்டு முக்கிய பௌத்த மத குருமாரைப் பற்றியே இங்கு குறிப்பிடுகிறேன். ஒருவர் தொண்டமான் யோசனைக்கு எதிராகக் கருத்தைத் திரட்டுவதில் முக்கிய பங்கை ஆற்றுகின்றார். எழுபது வயதைக் கடந்துவிட்ட இவர்கள் விடுதலைப்புலிகளுக்கெதிரான போரின் நியாயத்தைப் பிரசாரப்படுத்துவதுடன் தற்போதைய போர் தொடரப்பட வேண்டிய அவசியம்பற்றி எனக்கே விளக்கமளிக்கின்றார்கள் ஆயிரக்கணக்கான மனித உயிர்களை ஏற்கனவே காவு கொண்டுவிட்ட இந்த யுத்தத்தைத் தொடர்வதால் உளவியல் ரீதியாகவும், உணர்ச்சி அடிப்படையிலும் இருக்கக் கூடிய பாதிப்புக்களைத் தானும் கிரகிக்கும் ஆற்றல் அவர்களுக்கு இல்லை என்றே எனக்கு தோன்றுகிறது அவர்களுடனான எனது இரண்டு மணிநேரப் பேச்சுவார்த்தைகளே சிங்களத் தொடர்புசாதனங்கள் பற்றி நான் முன்னர் சொன்ன கணிப்பீடு சரியென உணர்த்தியது. ஆதிக்கம்செலுத்தும் சிங்கள பௌத்தமேலாண்மைவாதம் சிங்களத்தேசியவாதத்தோடும் உணர்ச்சிபூர்வமாகப் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது இந்த அடிப்படையில் போரா? சமாதானமா? என்பதைத் தீர்மானிப்பதில் இந்த பௌத்த பீடத்தினர் பெரும் பங்கை வகிக்கின்றனர்.

இதனால் சமாதானம் பற்றிய எனது நம்பிக்கைகளை இழந்து விட்டேன் ஆனால் நான் என்னை இழந்து விடவில்லை. அண்மையில் மனித உரிமை விவகாரங்களில் அக்கறையுடைய ஒரு தமிழ் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். சமாதானத்திற்கான நம்பிக்கை இருப்பதையும் அது மக்களிடையே தான் என்றும் அவர் என்னைநம்பவைத்தார். பலசிங்களமக்களுடன் பேசியதிலிருந்து யுத்த வெறியர்களிடமிருந்து வெகு தொலைவில் அவர்கள் இருப்பதைப் புரிந்து கொண்டேன். போர் வாழ்க்கைக்கு ஒரு இடையூறாக இருப்பதைப் பற்றி அவர்கள் விழிப்பாக உள்ளனர். இந்தப் போர் தொடர்வதால் உருப்படியான பயன் விளையப் போவதில்லை என்பதை அறிந்துள்ளனர் சில சமயங்களில் முழுப் பிரச்சினைகள் பற்றியும் ஒரு கிறுக்குத்தனம் அவர்களிடம் காணப்படுகின்றது.

வடக்கைப் பிரித்து ஒரு பெரும் சுவரை எழுப்பி அதற்கு அப்பாலுள்ளபகுதியைபுலிகளிடம் ஏன் அரசாங்கம் கொடுத்துவிடக் கூடாது? என்று சிங்கள மக்களிடையே சிலர் கூறுவதை நான் இப்போது அடிக்கடி கேட்க நேர்கிறது. இந்தக் கிறுக்குத்தனமான கேள்வியின் பின்னால் எட்டாண்டுகளுக்கு மேலாக நீடிக்கும் இந்தப்போர் தொடரக்கூடாது என்ற உறுதியான உணர்வு இருப்பதைப புரிந்து கொள்ளவேண்டும்,

இனப்பிரச்சினைக்கான தொண்டமானின் தீர்வுத் திட்டம் குறித்து இன்று எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் இதுவரை காலமும் நிறைவேறாதுள்ள சிங்கள மக்களின் அடிப்படை எண்ணங்களை வெளிப்படுத்துவதாக உள்ளன சிங்களப் புத்திஜீவிகள், பௌத்த சமயம் மற்றும் முக்கிய அரசியல் கட்சிகளின் தயக்கமும், கையாலாகாத்தனமும் சேர்ந்து ஜனநாயக ரீதியில் தலையிட்டு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனப்போருக்கு ஒரு சமாதான தீர்வைக் காண முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளன. எமது அரசியல் கட்சிகள் எமது கோட்பாடுகள் எல்லாம் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண முடியாத கையாலாகாத நிலையில் உள்ளன என்பதை நிரூபித்து விட்டன எனது அவதானமாகும்: எவ்வளவுதான் துயரம் தருவதாக இருந்தாலும் சுய விமர்சனத்தின் மூலம் எமது தவறுகளை நாம் உணர்ந்தாக வேண்

[3ஆம் பக்கம் பார்க்க]

# தோட்டத்தொழிலாளர் கல்வி; ஆராயஆணைக்குழுதேவை

— சந்திரசேகரம்

(கொழும்பு)

மலையகத்தில வாழும் மக்களில் 90 வீசமானோர் தோட்டத்தொழிலாளர்கள் ஆவர். இவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்கும் போது எத்தகைய ஏற்றமும் காணப்படவில்லை. இந்நிலையில் இதுபற்றிஆராய அரசாங்கம் ஒருஆணைக் குழுவை அமைக்கவேண்டும்.

கண்டி ரொக்டேல் மண்டபத்தில் நடைபெற்றஅறிவியல் கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய சமூக விஞ்ஞானத்துறையியல் விரிவுரையாளர் திரு. சோ. சந்திரசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி அவசியமும் அவசரமுமான கல்விக் கொள்கை நிலையாக வகுக்கப்படுதல் அவசியம் ஜனநாயக நாடென வர்ணிக்கப்படும் அமெரிக்காவில் ஒரு கோட்பாட்டின் அடிப்படையிலேயே கல்வி வழங்கப்படுகிறது இந்த நாட்டைப் பொறுத்த மட்டில் பெருந்தோட்டப் பாடசாலைகளை உரிய வழியில் இட்டுச் செல்ல உருப்படியானதிட்டம் எதுவும் இல்லை.

இன்றைய எமது நாட்டில் தலை சிறந்த கல்விமான்கள் இருக்கின்றனர். இவர்களைக் கொண்டு உரியகல்வித்திட்டம் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும். தோட்டப் பாடசாலைபற்றிஆராய ஒரு பேராசிரியர் ஆய்வு நடாத்தினார். இறுதியில் அவர் சமர்ப்பித்த அய்வறிக்கை எதிரும்புதிருமாகவே அமைந்தது தோட்டப் பகுதிகளில் வாழ்ந்த குடியேறிய தமிழ் மக்கள் சிங்களம் தான் படிக்க வேண்டும் என அந்த பேராசிரியர் தமதுஅறிக்கையில்சமர்ப்பித்திருந்ததுஆச்சரியமாக இருக்கின்றது.

இலவசக் கல்வி என்பது எல்லோருக்கும் பொதுவானதாகும். இத்தகைய வசதி தோட்டப்புற மக்களுக்கு கிடைத்ததா என்பதே ஆராயப்படவேண்டும்.

சமூக அந்தஸ்தை வழங்குவது கல்வியே எனவே மலையக மககளின் கல்வி பற்றி ஆராய அரசாங்கம் ஒரு ஆணைக் குழு ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மலையக மக்களின் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டுஅவர்களதுவாழ்க்கையும் வளம் பெறும்.

## தோட்டங்கள் நட்டம்; தொழிலாளர் பட்டினி

(இரத்தினபுரி)

அரசுக்குச் சொந்தமான சுமார் 450 தோட்டங்களும் 22 கம்பனிகளிடம் கையளிக்கப்படவுள்ளன. தோட்டங்களை கம்பனிகள் நிர்வகிப்பதன் மூலம் திறமையான நிர்வாகம் ஏற்படும் என சப்ரகமுவ மாகாண சபையின் அங்கத்தவரான திரு. ஏ. எம். டி. இராஜன் சப்ரகமுவ மாகாண சபையில் அரச தோட்டங்களை கம்பனிகளுக்குக் கையளிப்பதை நிறுத்த வேண்டும் எனும் பிரேரணையில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 1974-1976 காலப்பகுதியில் தோட்ட நிர்வாகம் அரசமயமாக்கப்பட்ட போது போதிய நிர்வாகத் திறன் இல்லாத காரணத்தால் நிர்வாகச் சீர்கேடுகள் அதிகரித்தன. 1977 அளவில் நட்டத்தில் இயங்க ஆரம்பித்தன. இதனால் தோட்டத் தொழிலாளர் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆனால் தற்போது தோட்ட நிர்வாகம் கம்பனிகளிடம் கைமாறுவதால் கம்பனிகள் இலாபத்தை நோக்கமாகக் கொண்டே செயல்படும். இதனால் தோட்டங்கள் வீண் விரயம் தவிர்க்கப்பட்டு காடு மண்டிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை பயிரிடலாம்: இதன்மூலம் உற்பத்திகளை அதிகரிக்கமுடியும். உற்பத்திகள் அதிகரிக்க தோட்டங்களில் வேலை வாய்ப்பு பெருகும். இதனால் தோட்டங்களில் வேலையில்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

அத்துடன் கம்பனிகள் நிர்வாகத் திறமைக்கே முக்கியத்துவம் அளிக்கும். இதனால் நட்டத்தில் இயங்கும் தோட்டங்கள் இலாபமடையத் தொடங்கும். எனவே தோட்டங்களை கம்பனிகள் நிர்வகிப்பது இலாபம் தரக்கூடிய ஒன்றாகவே அமையும் எனத் தெரிவித்தார்.

## 15 வயதுச் சிறுவன் நரபலி சடலத்தை ஏற்கதாய்மறுப்பு!

புளத்கொடுப்பிட்டி டெடுகல தோட்டத்தொழிற்சாலையில் நரபலியிடப்பட்டாரென்று கூறப்படும் ரவீந்திர கீத்சிறிகுமார என்ற 15 வயதுச் சிறுவனின் மரணம் தொடர்பாக தகவல் தருபவருக்கு 25,000 ரூபா சன்மானம் வழங்க தோட்டநிர்வாகம் முன்வந்துள்ளதாக நிலயப் பொறுப்பதிகாரி திரு. எஸ். பி. எல்லப்பொல தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் மிருகபலியிடப்பட்டதென்றும் இதன்பின் நரபலியிடத் தீர்மானிக்கப்பட்டதென்றும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ரவீந்திராவின் சடலத்தைக் கையேற்க முடியாதென்று பெற்றோர் தெரிவித்தனர். பின்னர் சடலத்தைக் கையேற்க மறுப்பது குறித்துப் பொலிசாருக்கு வாக்குமூலம் அளிக்குமாறு அவனது தந்தையை பொலிஸார் கோரியிருந்தனர்.

15 வயதான ரவீந்திரா 20 வயது தோற்றம் கொண்டவர் எனவும், பத்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி அவன் அருகேயுள்ள தேயிலைத் தொழிற்சாலை ஒன்றில் நாளாந்தம் 50 ரூபா கூலிக்கு வேலைசெய்து வந்தாரெனவும் தனது மகன் நரபலியிடப்பட்டுள்ளான் எனவும் அவனது சடலத்தைச் சுற்றி முட்டைக் கோதுகளும் ஊதுபத்திகளும், மண்விளக்குகளும் காணப்பட்டதாக அவனது தாயார் பொடிமெனிக்கே பத்திரிகை நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

### உன்னிச்சை

வீரவேங்கை யாபீர், வீரவேங்கை நியாஸ்ர், வீரவேங்கை டானியல், வீரவேங்கை பழனி ஆகிய பன்னிரண்டு பேருமே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள் ஆவர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### கடனுதவிக்கு

ஏற்படக்கூடிய இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா கைவிடவேண்டுமென இந்நாடுகள் வலியுறுத்திக் கூறியிருப்பதுடன் அரசியல் தீர்வுக்கு சமாதான வழிதழுவிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் கோரியுள்ளன. இந்தக் கோரிக்கையானது கடனோடு இணைந்த நிபந்தனையாகப் போடப்பட்டிருப்பதாக பாரிஸ் நகரிலிருந்து எமக்குக் கிட்டிய செய்திகளிலிருந்து தெரியவருகிறது.

இந்த நிபந்தனையுடன் கடன் பெற்றுக் கொண்டதை சிறிலங்கா அரசு மறுத்துவருவது குறிட்பிடத்தககது.

### இராணுவப்

வம் 12 குடிசைகளை தீயிட்டுக் கொளுத்தியுள்ளது. காடுகளுக்கு தப்பியோட முயன்ற அப்பாவிகள்மீது சிறிலங்கா இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து காயப்படுத்தியுள்ளது.

பன்சேனை, போரதீவு, மண்டூர் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு அங்குள்ள தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டு சிறிலங்கா இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இலங்கையில்

இரத்தத்தைப் பரிசோதிக்கும் போது சுகாதாரத்தையும் மற்றும் சாதாரண பரிசோதனை முறைகளையும் பேணுவதன் மூலம் இரத்த மூலம் தொற்றும் எயிட்ஸ் போன்ற நோய்கள் பரவுவதைத் தடுக்கலாம் என்றார். எமது சுகாதாரத் தடுப்பு முறைகள் பக்ரீரியாவுக்கு எதிராக பாதுகாப்பளிப்பதில்லை. இன்று நாம் வைரஸ் நோய்கள் காலத்தில் வாழ்கின்றோம் என்றும், ஒரு மதிப்பீட்டின்படி நாட்டின் ஆஸ்பத்திரிகளிலுள்ள சத்திர சிகிச்சைக் கூடங்கள் பற்றி 17விகிதமான மயக்க மருந்து நிபுணர்களே திருப்தி தெரிவித்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

### பலாலி

தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இத்தாக்குதல்கள் தொண்டமானாற்றுப் பகுதி நோக்கியும் நடத்தப்பட்டது. இதில் பல வீடுகள் சேதமடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

### சீனன்குடா

ஜெலிக்னைட் மற்றும் இரசாயனப் பொருள்கள் எவ்வாறு ஒரே இடத்தில் குவிக்கப்பட்டன என்பது புதிராகவே இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கான சரியான காரணம் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. இதைத் தீர்மானிக்க முடியாது என்றும் பி.பி.ஸி. சிங்கள சேவை கருத்து வெளியிட்டது.

### பீரங்கி

நிலை பகுதியை நோக்கி பீரங்கித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கோவளம் கடற்பகுதியில் இருந்து அதிகாலை ஐந்து மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இப் பீரங்கித் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை. (ச)

### வீரச்சாவு

லிங்கம் - சுரேஸ்குமார்) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## காவத்தையில் 20 பேர் பொலிஸாரால் கைது

காவத்தைப் பகுதியில் இருந்த வெளியிடங்களைச் சேர்ந்த இருபது பேரை சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர். வடபகுதியில் உள்ளவர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து காவத்தைப் பகுதியைச் சேர்ந்த சுமார் பன்னிரண்டு அரசாங்க தோட்டங்கள் பொலிசாரின் கடும் கண்காணிப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## மன்னார் அகதிகள் கற்பிட்டிக்கு பயணம்

தமிழகத்தில் இருந்து கப்பல் மூலம் திருமலை வந்துசேர்ந்த அகதிகளில் மன்னார் பகுதியினர் கடந்தசெவ்வாய்க்கிழமை பஸ்வண்டி மூலம் கற்பிட்டிக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

13 குடும்பங்களைச் சேர்ந்த 37பேரே கற்பிட்டிக்குஅனுப்பி வைக்கப் பட்டவர்களாவர். இவர்கள் கற்பிட்டியில்இருந்து படகுமூலம் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்படுவர். இவர்களில் ஆறு பேர் அரச உத்தியோகத்தர்களாவர்.

## மயிலிட்டிகடற்றொழிலாளர் நலன் காக்கும் சங்கம்

இடம் பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர்களின்நலன் களைக்கவனிக்கும் பொருட்டு ''இடம் பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்புச் சங்கம்'' என்று ஒரு அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் கடற்படைத் தளபதி சூசை தலைமையில் வடமராட்சி கடற்றொழிலாளர் ஒன்றியத்தின் காரியாலயத்தில் கடந்த 03. 12. 91 அன்று இச் சங்கம் அமைக்கப்பட்டது.

இதன் தலைவராக ச.ஏரம்பமூர்த்தியும் உப-தலைவர் சி. இராமநாதனும் இணைச்செயலாளர்களாக நா. வடிவேஸ்வரனும் த. கணபதிப்பிள்ளையும் பொருளாளராக வீ செல்லக்கதிரமலையும் மற்றும் 20 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## மேலதிக வேலை வழங்கல்; கண்டிப்பான விதிகள்

[கொழும்பு]

அரசஅலுவலகங்களில் வீண் விரயம், மேலதிக வேலைக் கொடுப்பனவு ஆகியவை தொடர்பான விதிமுறைகளைக் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் பல தத்தம் கிளை அலுவலகங்களுக்கு பணிந்துள்ளதாக அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக நேரவேலை தொடர்பில் பெருந்தொகையான பணம் செலவிடப்படுவதாக தெரிய வந்ததைத் தொடர்ந்தே இந்தக்கட்டுப்பாட்டை கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில தரத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பலர் கிட்டத்தட்ட சம்பளத்தை எட்டிப் பிடிக்கக்கூடியளவுக்கு மேலதிக வேலைபணத்தை பெறுவது தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ். திணைக்களங்களுக்கு தனிச்சிங்களத்தில் கடிதம்

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களுக்கு கொழும்பு தலைமைச் செயலகங்களிலிருந்து தனிச் சிங்களத்தில் கடிதங்கள், சுற்று நிருபங்கள் தொடர்ச்சியாக அனுப்பப்பட்டு வருகிறது

கொழும்பு ஒய்வூதியத் திணைக்களம்உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம், சுங்க இலாகா ஆகியதிணைக்களங்களுக்கு தனிச்சிங்களத்தில் சுற்றுநிருபம், கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (24)

## 'சார்க்' நாடுகளிடையே விசா முறையில் தளர்வு

'சார்க்' நாடுகளிடையே பிரயாணம் செய்வதற்கு விசா நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளது. இத்தகவலை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் வால்டர்பர்னான்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் உயர் நீதிமன்ற நீதியரசர்கள், தேசிய கல்விநிலைய தலைவர்கள் ஆகியோர் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் 'சார்க்' நாடுகளுக்கிடையே விசா இன்றி பயணம் செய்யமுடியும் இவர்களின் குடும்பத்தினரும் இத்தகைய சலுகைகளைப் பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்தவருடம் நடைபெற்ற 'சார்க்' நாடுகளின் ஆறாவது உச்சிமாநாட்டில் இந்த நடைமுறைக்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இதேபோன்ற நடைமுறையை மாலைதீவுக்கும், சிறிலங்காவிற்கும் இடையே பின்பற்றுவதென சென்ற மாதம் மாலைதீவு அரசாங்கம் அறிவித்தது.

'சார்க்' நாடுகளிடையே குடிவரவு குடியகல்வு சட்டங்களை மேலும் தளர்த்த ஆலோசனைகள் நடாத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சி இணைந்து முன்னணி அமைக்க முயற்சி

(கொழும்பு)

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாசக் கட்சியும் அரச எதிர்ப்புக் கட்சிகளுடன் சேர்ந்து ஒரு முன்னணியை அமைக்க உள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த இரு கட்சிகளுடனும் இணைந்து கூட்டுமேதினத்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது. பொதுஜன மக்கள் முன்னணி அமையவிருக்கும் முன்னணி குறித்து மௌனம் சாதித்து வருகிறது.

இடபதரிலகை யாழ்ப்பாணம மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெபரவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது